**<u>STARTING TIME 10.54 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 22/2019</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 06.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கண்ணன்** Father's Name : **கோவிந்தராஜ்**

Address : எண்.113, சித்தூர் மெயின்ரோடு, எரும்பி காலனி,
எரும்பி அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம்.

Age : 73

**<u>11 முதல் 16 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

10. அம்மாகண்ணம்மாள் என்பவருக்கு நாகவள்ளி என்ற ஒரே மகள் தான் வாரிசு என்றால், சரிதான். அம்மாகண்ணம்மாள் காலமாவதற்கு முன்பே அவரது மகள் நாகவள்ளி காலமாகிவிட்டார் என்றால், சரிதான். நாகவள்ளி என்பவருக்கு எஸ்தரம்மாள் என்ற ஒரே மகள் வாரிசு என்றால், சரிதான். எஸ்தரம்மாளின் வாரிசுகள் தான் 1, 2 பிரதிவாதிகள் என்றால், சரிதான்.

11. எஸ்தரம்மாள் உயிருடன் இருந்த போதே 3, 4 பிரதிவாதிகள் பெயரில் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 809/1986 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால், சரிதான். இவ்வழக்கு சொத்தின் பேரில் உரிமை விளம்புகை செய்யக் கோரி தான் மேற்படி வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி தெரியவில்லை. இவ்வழக்கின் 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மேற்படி வழக்கை பற்றி சொல்லியுள்ளதை எனது வழக்கறிஞரிடம் கேட்டுக் தெரிந்துக் கொண்டேனா என்றால், இல்லை.

12. மேற்படி எஸ்தரம்மாள் தாக்கல் செய்த மேற்படி அசல் வழக்கு எண் 809/1986 வழக்கு கடந்த 19.08.1991 அன்று தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அவ்வழக்கின் தள்ளுபடி தீர்ப்பை எதிர்த்து மேற்படி எஸ்தரம்மாள் ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 51/1993 என்ற வழக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. அந்த மேல்முறையீட்டு வழக்கும் கடந்த 31.03.1995 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால், அது பற்றியும் எனக்கு தெரியாது. அந்த விவரங்களை தெரிந்துக்கொள்ள முயற்சி செய்தேனா என்றால், இல்லை.

13. மேற்படி அசல் வழக்கு எண் 809/1986 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண் 51/1993 என்ற வழக்குகள் தள்ளுபடியான பிறகு மேற்படி எஸ்தரம்மாள் 5–ம் பிரதிவாதியுடன் சேர்ந்துக் கொண்டு 03.12.1997 அன்று வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தையும் 07.12.1997 அன்று வா.சா.ஆ.6 கிரையப் பத்திரத்தையும் ஏற்படுத்தினார் என்றால், சரிதான்.

14. மேல்முறையீட்டு வழக்கு எண் 51/1993 என்ற வழக்கு தள்ளுபடியான பிறகு அந்த தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி எஸ்தரம்மாள் 2–வது மேல்முறையீட்டு வழக்கு எதையும் தாக்கல் செய்தாரா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

15. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரையப் பத்திரங்களை அடிப்படையாக கொண்டு தான் மேற்படி அசோகன் தாவா சொத்துக்களை எனக்கு கிரையம் செய்துக் கொடுத்தார் என்றால், சரிதான். நான் தாவா சொத்துக்களை கிரையம்

பெறுவதற்கு முன்பு தாவா சொத்துக்களில் மேற்படி அசோகன் என்பவருக்கு உரிமை உள்ளதா என்பதை விசாரித்த பிறகு தான் கிரையம் பெற்றேனா என்றால், ஆமாம். நான் அசோகனிடமிருந்து கிரையம் பெற்ற வா.சா.ஆ.8 கிரையப் பத்திரம் நிலுவை ஆவணமாக வைக்கப்பட்டு, அதன் பிறகு பதிவு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் அசோகனிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் பதிவு எண் தெரியுமா என்றால், தெரியவில்லை.

16. நான் இந்த வழக்கை முதலில் ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் கடந்த 08.04.2010 அன்று தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு முதலில் அசல் வழக்கு எண் 93/2010 என கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் இவ்வழக்கை ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா 1–வது அயிட்ட சொத்தில் 12 செண்டையும், 2–வது அயிட்டத்தில் 16 செண்டையும் 4–ம் பிரதிவாதி, அவரது உடன்பிறந்த சகோதரர் பஞ்சாட்சரம் என்பவர் பெயருக்கு 05.11.2009 அன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான், ஆனால் அந்த ஆவணம் தவறான ஆவணமாகும்.

17. அதே போல் 4–ம் பிரதிவாதி, அவரது மற்றொரு சகோதரான ராஜா என்பவர் பெயருக்கு தாவா 1–வது அயிட்ட சொத்தில் 12 செண்டையும், 2–வது அயிட்டத்தில் 15 செண்டையும் 05.11.2009 அன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான், ஆனால் அந்த ஆவணமும் தவறான ஆவணமாகும். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரங்களின்படி தாவா சொத்துக்களை மேற்படி பஞ்சாட்சரம் மற்றும் ராஜா என்பவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

18. வழக்கிடையில் காலமான 4–ம் பிரதிவாதியின் வாரிசுகளை 11 முதல் 16

வரை பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் பிறகு 16–ம் பிரதிவாதி இவ்வழக்கில் ஒரு பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால், அது பற்றியும் எனக்கு தெரியாது. அந்த பதிலுரையிலும் 4–ம் பிரதிவாதி அவரது சகோதரர்கள் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், அது பற்றியும் எனக்கு தெரியாது. அந்த பதிலுரை தாக்கல் செய்த பிறகும் மேற்படி பஞ்சாட்சரம் மற்றும் ராஜா ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால், சரிதான்.

19. தாவா சொத்துக்களில் மேற்படி எஸ்தரம்மாளுக்கு உரிமையில்லாத நிலையில் அவர் அந்த சொத்துக்களை மேற்படி அசோகன் என்பவருக்கு கிரையம் செய்துக் கொடுத்ததே தவறு என்றும், அசோகனிடமிருந்து நான் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால், சரியல்ல. நானும், எஸ்தரம்மாள் மற்றும் அசோகன் ஆகியோர்கள் சேர்ந்து ஒரு கிரையப் பத்திரம் ஏற்படுத்தி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி செல்லாது என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. எனவே, தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. உரிமையில்லாத சொத்துக்களில் எனக்கு உரிமையுள்ளதாக சொல்லி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

20. தாவா சொத்துக்களை நான், அசோகன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்று, அனுபவித்து வருவதாக சொல்வதற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையில்லாததால் தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

11 முதல் 16 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 11.34. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.06 16:01:27 +0530